# உலக நீரிழிவு தின விழிப்புணர்வு பேரணி: தூத்துக்குடியில் அமைச்சர் கீதாஜீவன் துவக்கி வைத்தார்

தூத்துக்குடி.நவ.25.

தூத்துக்குடியில் உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு நடை ஓட்டத்தை அமைச்சர் கீதாஜீவன் துவக்கி வைத்தார்.




தூத்துக்குடியில் சுந்தரம் அருள்ராஜ் மருத்துவமனை & இந்தியன் மெடிக்கல் அசோசியேஷன், டாக்டர் அருள்ஸ் சர்க்கரை நோய், லைப் ஸ்டைல் & ஆராய்ச்சி மையம், மற்றும் *Women's Wing of IMA* தூத்துக்குடி கிளை சார்பில் உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு நடைஓட்டம் வழிப்புணர்வு நிகழ்ச்சி ரோச் பூங்கா முன்பு நடைபெற்றது. விழாவில் சமூக நலன் மற்றும் பெண்கள் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதாஜீவன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நடை ஓட்டத்தை துவக்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு சுந்தரம் அருள்ராஜ் மருத்துவமனையின் தலைவர் பேராசிரியர் டாக்டர் அருள்ராஜ் தலைமை வகித்தார். *IMA* தலைவர் டாக்டர் பூங்கோதை வரவேற்புரை ஆற்றினார். சுந்தரம் அருள்ராஜ் மருத்துவமனை இயக்குநர் டாக்டர் ஆர்த்தி கண்ணன் வாழ்த்துரை வழங்கினார். செயலாளர் டாக்டர் சிவசைலம் செயலாளர் நன்றியுரை வழங்கினார்.

# தடை செய்யப்பட்ட பகுதியில் மீன் பிடித்த தூத்துக்குடி மீனவர்களிடம் விசாரணை

தூத்துக்குடி.நவ.25

லட்சத் தீவு அருகே தடை செய்யப்பட்ட பகுதியில் மீன் பிடித்ததாக தூத்துக்குடி மீனவர்கள் 10 பேரை இந்திய கடலோர காவல் படையினர் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

லட்சத் தீவின் தலைநகரான கவரட்டி தீவு கடலில், ஒரு குறிப்பிட்ட பகுதிவரையில் மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தடை செய்யப்பட்ட பகுதியில் கொச்சியில் இருந்து சுமார் 350 கடல் மைல் தொலைவில் ஒரு விசைப்படகு மீன்பிடித்துக் கொண்டிருப்பதாக இந்திய கடலோர காவல் படைக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அங்கு விரைந்த கடலோர காவல் படையினர், அங்கு சட்ட விரோதமாக மீன்பிடித்துக் கொண்டிருந்த படகை சுற்றி வளைத்தனர். தொடர்ந்து அவர்கள் மேற்கொண்ட விசாரணையில், தூத்துக்குடி தருவைகுளத்தைச் சேர்ந்த அந்தோணி என்பவருக்குச் சொந்தமான படகு என்பதும், கடந்த 16ஆம்தேதி தூத்துக்குடி தருவைகுளத்தில் இருந்து மீன்பிடிக்க சென்றதும் தெரியவந்தது.

அதில் ராமநாதபுரம் சாயல்குடியைச் சேர்ந்த முத்துபாண்டி, பழனி வலசையைச் சேர்ந்த ராஜசேகர், தருவைகுளத்தைச் சேர்ந்த சரவணன், மிக்கேல், அந்தோணி, வேம்பாரைச் சேர்ந்த அசோக், மில்டன், வெள்ளப்பட்டியைச் சேர்ந்த காளி, கீழவைப்பாரைச் சேர்ந்த விஜயன், தாளமுத்துநகரைச் சேர்ந்த பிரபு ஆகிய 10 பேரையும் பிடித்து கடலோர காவல்படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.



தென்காசி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்த விழிப்புணர்வு கோலப்போட்டியினை கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் பார்வையிட்டார்.

# தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம்: மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ பங்கேற்பு

சங்கரன்கோவில். நவ.25.

சங்கரன்கோவிலில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் பத்மநாதன் தலைமை வகித்தார். வடக்கு மாவட்ட தொகுதி பார்வையாளர்கள் சங்கரன்கோவில் ராமஜெயம், வாசுதேவநல்லூர் தனுஷ் எம் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் அமைச்சர் தங்கவேலு, யூஎஸ்டி சீனிவாசன், பரமகுரு, மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் டாக்டர் செண்பக விநாயகம், மாவட்டத் துணைச் செயலாளர்கள் புனிதா, ராஜதுரை, மனோகரன், மாவட்ட பொருளாளர் சரவணன் முன்னிலை வகித்தனர். இந்த கூட்டத்தில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு பேசியதாவது,



வரும் நவம்பர் 27 ஆம் தேதி தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட கழகம் சார்பில் 100 நிகழ்ச்சிகள் நடத்தப்படும் எனவும், ஒன்றிய, நகர ,பேரூர் பகுதிகளில் புதிய கொடிக்கம்பங்கள் மற்றும் பொதுக் கூட்டங்கள், கட்சிக் கொடி ஏற்றுதல் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கி இளைஞர் எழுச்சி நாளாக கொண்டாட வேண்டும் எனவும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி திருக்கோயிலில் 5 நாட்கள் அன்னதானம் வழங்கப்படும் எனவும், வடக்கு மாவட்ட திமுக சார்பில் ரத்த தானம் முகாம்,மருத்துவ முகாம் ,மற்றும் கண் தானம், உடல் தானம் செய்ய பதிவு செய்யப்படும் எனவும், மாவட்ட கழகம் சார்பில் பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடத்தப்படும் எனவும், மேலும் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள், மாவட்டம் முழுவதும் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி ,பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும் எனவும் தெரிவித்தார். இதில் நவம்பர் 27ஆம் தேதி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட , ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தி அதை தீர்மான வடிவில் தலைமை கழகத்தில் சமர்ப்பிக்க வேண்டும், 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு இல்லம்தோறும் இளைஞர்கள் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டும் எனவும், புதிதாக இளைஞர் அணிக்கு வருபவர்களுக்கு சமூக வலைத்தள பயிற்சி அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது. இதில் பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமி பாண்டியன், சாகுல் ஹமீது, மகேஸ்வரி, தேவா என்ற தேவதாஸ், ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், பொன் முத்தையா பாண்டியன், கடற்கரை, பூசைபாண்டியன்,பெரியதுரை, சேர்மத்துரை, வெள்ளத்துரை, கிறிஸ்டோபர், ராமச்சந்திரன், குணசேகரன், பால்ராஜ் ,நகர செயலாளர்கள் சங்கரன்கோவில் பிரகாஷ், புளியங்குடி அந்தோணிசாமி, பேரூர் கழகச் செயலாளர்கள் ரூபி பாலசுப்பிரமணியன், குருசாமி, மாரிமுத்து, சேது சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தென்காசி தெற்கு மாவட்ட திமுக மருத்துவ அணி சார்பாக இலவச மருத்துவ முகாம்

## மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது



தென்காசி நவ.25:

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட திமுக மருத்துவ அணி சார்பாக மாபெரும் இலவச மருத்து முகாம் நேற்று (நவ.24) பூலாங்குடியிருப்பு ஆக்சிஜன் ஜிம் எம்எஸ் எம் லைஸ்மில்லில் வைத்து காலை 8.30 மணி முதல் மதியம் 2.30 மணி வரை முகாம் நடைபெற்றது. முகாமிற்கு தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் தலைமை தாங்கினார். செங்கோட்டை ஒன்றிய கழக செயலாளரும் புதூர்(செ) பேரூராட்சி தலைவருமான ரவிசங்கர், தென்காசி தெற்கு மருத்துவரணி தலைவர் டாக்டர்.மாரிமுத்து, துணைத்தலைவர் டாக்டர். சஞ்சீவி, கடையநல்லூர் தொகுதி மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர்.சேக் முகம்மது ஆகியோர் முன்னிலை வகித்தனர். தென்காசி தெற்கு மாவட்ட மருத்து அணி அமைப்பாளர் டாக்டர் அன்பரசன் மருத்துவ முகாமிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஹக்கீம் தொகுப்புரை வழங்கினார். புதூர்(செ) பேரூர் செயலாளர் கோபால் வரவேற்புரையாற்றினார். இம்மருத்துவமுகாமினை மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ராஜா, மாநில மருத்துவர் அணி துணை செயலாளர்கள் டாக்டர் கலை கதிரவன், டாக்டர் செண்பக விநாயகம், கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் நெளசாத் ஆகியோர் துவக்கி வைத்தனர். முகாமில் பொது நல மருத்துவர், சர்க்கரை நோய், மற்றும் குழந்தைகள் நல மருத்துவர் டாக்டர் தமிழரசன், பொதுநல மருத்துவர் டாக்டர் அன்பரசன், சித்தமருத்துவர் டாக்டர் கௌதமி தமிழரசன், எலும்பு மற்றும் மூட்டுஅறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஸ்ரீ மணிகண்டன், குடல், இரைப்பை, கணையம், கல்லீரல் லேப்ரோஸ்கோபிக் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் அரவிந்த் மேனன் ஆகியோர் கலந்து கொண்டு முகாமில் சர்க்கரை அளவு உணவுக்கு முன், சர்க்கரை அளவு உணவுக்கு பின், பொது இரத்த அளவு, இரத்த அளவு, இ.சி.ஜி உட்பட்ட பரிசோதனைகளை இலவசமாக செய்யப் பட்டது. முகாமில் மாவட்ட மருத்துவரணி துணை அமைப்பாளர் டாக்டர் மாரியப்பன், தென்காசி மாவட்ட துணை அமைப்பாளர்கள் சுரேஷ், பொன்ராம், தனசிங், டாக்டர் கௌதமி தமிழரசன், ராதிகா, முத்துமாரி உட்பட ஒன்றிய அவைத்ததலைவர் கட்டாரி பாண்டியன், ஒன்றிய துணை செயலாளர்கள் வாசுதேவன்;, ஜான்சன், சீதா லெட்சுமி முத்து, ஒன்றிய பொருளாளர் பழனிச்சாமி, மாவட்ட பிரதிநிதிகள் தம்பிதுரை, சாகுல் ஹமீது, சுரேஷ் குமார், சீதாராமன், ஒன்றிய பிரதிநிதி செல்வம், பூலாங்குடியிருப்பு கழக நிர்வாகிகள் கைகொண்டான், சிவனுதேவர், முருகன்;, சிக்கந்தர், ஆறுமுகம், அகமது, கிருதுஒலி, பண்டாரம், செண்பகம், சேது, ஹக்கீம், மைதீன் அப்துல் காதர், கேடிசி சந்திரன், ராமகிருஷ்ணன், மாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். முகாமில் 400க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனைகளை செய்து கொண்டு மருத்துவர்கள் ஆலோசனையின் படி மருந்துகளை இலவசமாக பெற்றுக் கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் ராமர்பாண்டியன் நன்றி கூறினார்.



கோவில்பட்டிலாயல்மில்காலனிவாக்குச்சாவடியில்அதிமுக மத்திய ஒன்றிய செயலாளர்யூ பழனிச்சாமி வாக்காளர்சேர்ப்பு பணியில் ஈடுபட்டார். மூப்பன்பட்டி கிளைச் செயலாளர் முருகன் அம்மா பேரவை மத்திய ஒன்றிய செயலாளர் வேல்முருகன் தகவல் தொழில்நுட்ப அணி மாரிமுத்து பாண்டியன் ஆகியோர் உடன் உள்ளனர்

சங்கரன்கோவிலில்

# வாய்ஸ் ஆப் தென்காசி அமைப்பின் சார்பில் பட்டதாரி இல்லத்தரசிகளுக்கான பயிற்சி வகுப்பு துவக்க விழா

## முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் பங்கேற்பு

சங்கரன்கோவில். நவ.25.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் வாய்ஸ் ஆப் தென்காசி அமைப்பின் சார்பில் பட்டதாரி இல்லத்தரசிகளுக்கான பயிற்சி வகுப்பு துவக்க விழா நிகழ்ச்சி சங்கரன்கோவில் மேல ரத வீதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் வைத்து நடந்தது. கூட்டத்திற்கு வாய்ஸ் ஆப் தென்காசி நிறுவனர் ஆனந்தன் அய்யாசாமி தலைமை வகித்தார். ஹரத்தா மானு அறக்கட்டளை நிறுவனர் மதுமதி நாராயணன் கலந்து கொண்டு இல்லத்தரசிகளுக்கான பயிற்சி வகுப்புகள் குறித்து பேசினார். ஸ்ரீதர் சிதம்பரம் உறுதிமொழி வாசித்தார். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன் கலந்து கொண்டு பேசியதாவது வாய்ஸ் ஆப் தென்காசி அமைப்பு பல்வேறு நலத்திட்ட பணிகளை செய்து வருகின்றது. சமூகத்தில் அடித்தட்டு மக்களை உயர்த்தும் வகையில் மருத்துவ முகாம், நீட் பயிற்சி, மரம் நடுதல் ,தற்போது இல்லத்தரசிகளுக்கான பயிற்சி வகுப்புகள், கிராமங்களில் பயணிகள் நிழல் குடை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட பணிகளை செய்து வருகின்றனர். சோஹோ நிறுவன தலைமை செயல் அதிகாரி ஸ்ரீதர் வேம்பு மற்றும் வாய்ஸ் ஆப் தென்காசி நிறுவனர் ஆனந்தன் அய்யாசாமி ஆகியோர் பல்வேறு பணிகளை சிறப்பான முறையில் செய்து வருகின்றனர். மேலும் இந்த அமைப்பானது வாய்ஸ் ஆப் தமிழ்நாடு என மாற்றப்பட்டுள்ளது. இதனால் தமிழகம் முழுவதும் இவர்களது பணி தொடர வாழ்த்துக்கள் தெரிவித்து கொள்கிறேன். மேலும் இந்த அமைப்பானது என்னைப் போன்று மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற முனைப்பில் செயல்பட்டு வருகின்றது . கவர்னர் பதவி என்பது பல்வேறு பணியாளர்கள், முன்னும் பின்னும் பல்வேறு கார்கள் பின்தொடர செல்வது உள்ளிட்ட பலவித வசதிகள் கிடைக்கும் பொறுப்பாகும். நான் அதை வேண்டாம் என விட்டு விட்டு தற்பொழுது மக்கள் பணி செய்ய வந்துள்ளேன். இந்த வாய்ஸ் ஆப் தென்காசி அமைப்பின் திட்டங்களை பொதுமக்கள் பயன்படுத்தி தொழில் தொடங்கி வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டுமென பேசினார். இந்த நிகழ்ச்சியில் சமுத்திரா சதீஷ், நெல்லை சம்பத், ராஜேஷ், மற்றும் மாணவ ,மாணவிகள், இளைஞர்கள் ,பெண்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் சோகோ நிறுவன தலைமைச் செயல் அதிகாரி ஸ்ரீதர் வேம்பு நன்றி கூறினார். அதனைத் தொடர்ந்து தமிழிசை சௌந்தரராஜன் செய்தியாளர்களிடம் கூறியதாவது,




இங்கு சங்கரன் கோவிலில் ஓம் ஸ்ரீ தர்ம சாஸ்தா பக்த சேவா அறக்கட்டளை சார்பில் ஒரு கோரிக்கை மனு வைத்துள்ளார்கள் தற்பொழுது கார்த்திகை மாதம் ஐயப்ப பக்தர்கள் தமிழ்நாடு மட்டுமன்றி இந்தியா மற்றும் உலக நாடுகளில் இருந்து சபரிமலைக்கு செல்வார்கள். இந்நிலையில் இசைவாணி என்ற பெண் ஐயப்பன் சுவாமியை பற்றி அவதூறாக பாடி பதிவிட்டுள்ளார் அவர் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். பாஜக கட்சியின் ஒருங்கிணைப்பாளர் எச் ராஜா மீது சென்னை விமான நிலைய போலீசார் நான்கு பிரிவுகளில் வழக்கு பதிவு செய்துள்ளனர் யார் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டுமோ அவர்கள் மீது செய்யாமல் எச் ராஜா மீது செய்துள்ளனர் .ஜவாஹிருல்லா போன்றவர்கள் காஷ்மீர் பிரிவினை வாதங்களை மண்ணின் உரிமைகாரர்கள் என முன்னிறுத்தி அவர்களுக்கு ஆதரவாக அமரன் படத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் பொழுது, அதனை கண்டித்து பிரிவினை வாதத்தை எதிர்த்த எச் ராஜா மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். இது பழி வாங்கும் நடவடிக்கையாகும் இதனை பாஜக ஒருபொழுதும் ஒத்துக் கொள்ளாது எனவும், தனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார். நடிகர் ரஜினி காந்த் சில அரசியல் தலைவர்களை சந்திப்பதும் சில கருத்துக்களை தெரிவித்தும் வருகின்றார். இதனால் அவர் மனதில் இன்னும் அரசியல் தாக்கம் உள்ளதோ என நினைக்கிறேன் எனவும், பாஜக வழங்கும் இலவச திட்டங்கள் மக்களின் வளர்ச்சியோடு சேர்ந்து திட்டம் ஆகும். மகாராஷ்டிரா தேர்தல் வெற்றி இந்தியா முழுவதற்கும் கிடைத்த வெற்றி போன்றதாகும் .ஏனென்றால் மகாராஷ்டிராவில் அனைத்து மாநில மக்களும் வசித்து வரும் சூழ்நிலையில் பாஜக அமோக வெற்றி பெற்றுள்ளது பாஜக மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை காட்டுகிறது என கூறினார்.

கடையநல்லூர் பகுதியில்

# பகுதி நியாயவிலைக்கடையை முழுநேர நியாய விலைக்கடையாக மாற்ற கலெக்டரிடம் கவுன்சிலர் கோரிக்கை

கடையநல்லூர் நவ.25:

கடையநல்லூர் நகராட்சிக் குட்பட்ட கிருஷ்ணாபுரம் 3வது மற்றும் 5வது வார்டுக் குட்பட்ட சுமார் 904 ரேசன் கார்டுகள் உள்ளது கடைஎண்: 27LA001P1 இந்தக்கடையானது வாரத்தின் மூன்று நாட்கள் மட்டுமே பகுதிநேரக்கடையாக இயங்கிவருகிறது அதிகப்படியான மக்கள் உள்ளதாலும் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பொருட்கள் வாங்குவதற்கு சிரமத்திற்கு ஆளாகின்றனர் ஆகவே இந்தக்கடையை மாதத்தின் அனைத்து நாட்களும் செயல்படும்படி முழுநேரகடையாக மாற்ற நடவடிக்கை எடுக்கும்படி 3வது வார்டு கவுன்சிலர் சுபா ராஜேந்திரபிரசாத் கோரிக்கை விடுத்துள்ளார்



# 57வது தேசிய நூலக இரு பெரு விழா

**சாத்தான்குளம். நவ.25**

இராம கோபாலகிருஷ்ணர் அரசு முழு நேர கிளை நூலக இரு பெரு விழா வாசகர் வட்டத் தலைவர் கவிஞர் ஓ சு நடராசன் தலைமையில் நடைபெற்றது.



சாத்தான்குளம் இராம கோபால கிருஷ்ணர் அரசுக் கிளை நூலகத்தில் 57.வது தேசிய நூலக வார விழா மற்றும் சீர்காழி இராமாமிர்தம் அரங்கநாதன் நல் நூலகர் விருது பெற்ற திருமதி அன்னாள் ஜெயந்தி பாராட்டு விழா நடைபெற்றது.

மாவட்ட நூலக அலுவலர் மீனாட்சி சுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். நல் நூலகர் சுப்பிரமணியன் வரவேற்றார். உணவு பாதுகாப்புத்துறை அலுவலர் பொன் முத்து ரூபாய் 1000 செலுத்தி புரவலராக தம்மை இணைத்துக் கொண்டார்.

இவ்விழாவில் வர்த்தக சங்கச் செயலாளர் மதுரம் செல்வராஜ் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றியக் குழு தலைவர் அ.பாலகிருஷ்ணன் வழக்குரைஞர்கள் சங்கச் செயலாளர் பொன் முருகானந்தம், வக்கீல் வேணுகோபால் நல் நூலகர்கள் விருது பெற்ற மாதவன், இராஜ துரை நாகர்கோயில் நூலகர் சித்திரைலிங்கம், யோகா ஆசிரியை இராஜலட்சுமி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பவுலின், ஓய்வு பெற்ற கல்வி அலுவலர் சாமுவேல்ராஜ், தமிழ்நாடு ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்க துணைத் தலைவர் பிரேம்குமார், ஆசிரியர் ஜான்சன், வட்டார மனிதநேய நல்லிணக்கப் பெரு மன்றச் செயலாளர் மகாபால் துரை உள்ளிட்ட பலர் வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விழாவில் நூலகர்கள் வாசகர் வட்ட நிர்வாகிகள் மற்றும் வாசகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நூலகர் இசக்கியம்மாள் நன்றி கூறினார்.

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு குற்றாலத்தில் யோகா மற்றும் ஸ்கேட்டிங் போட்டிகள் இன்று நடக்கிறது

தென்காசி நவ.25:

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு தென்காசி திமுக தெற்கு மாவட்டம் மற்றும் லட்சியம் அசோசியேசன் இணைந்து நடத்தும் மாபெரும் யோகா மற்றும் ஸ்கேட்டிங் போட்டிகள் 2024 இன்று (நவ.25) குற்றாலம் செய்யது மெட்ரிக் மேல் நிலைப் பள்ளியில் வைத்து நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமை வகிக்கிறார் செய்யது மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தலைவர் ஹாஜி. டி.இ.எஸ். பாது ரப்பாணி போட்டிகளை துவக்கி வைக்கிறார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தென்காசி சட்டமன்ற தொகுதி மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் கலை கதிரவன் பரிசுகளை வழங்குகிறார். லட்சியம் அசோசியேசன் மற்றும் இயற்கை யோகா மையம் நிறுவனர், துணைப் பேராசிரியர் பாலகணேசன் வரவேற்புரையாற்றுகிறார். நிகழ்ச்சிக்கு குற்றாலம் செய்யது மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர் டாக்டர் பாதுஷா, செய்யது கில்வியூ நர்சரி, பிரைமரி பள்ளி முதல்வர் லக்கி சந்திரா பால், டாக்டர் ஜெயகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். நிகழ்ச்சியின் முடிவில் லட்சியம் அசோசியேசன் மற்றும் இயற்கை யோகா மையம் கவிதா பாலகணேசன் நன்றியுரையாற்றுகிறார்.

மழைநீர் உயிர்நீர்

கோவில்பட்டியில் திமுக விவசாய அணி சார்பில்

# இலவச கண் பரிசோதனை முகாம்: நகராட்சி சேர்மன் கருணாநிதி தொடங்கி வைத்தார்



கோவில்பட்டி நவ 25

கோவில்பட்டி செக்கடி தெருவில் வைத்து திமுக தூத்துக்குடி வடக்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி மற்றும் 14 வது வார்டு திமுக சார்பில் சங்கரா கண் மருத்துவமனை இணைந்து கண் சிகிச்சை முகாம் நடந்தது.

கோவில்பட்டி நகராட்சி சேர்மன் கா . கருணாநிதி தலைமை வகித்து முகாமை தொடங்கி வைத்தார். கண் மருத்துவர் கபிலா ராஜ் பொதுமக்களுக்கு கண் பரிசோதனை செய்தார். திமுக வடக்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கோவில்பட்டி 14 ஆவது நகர மன்ற உறுப்பினர் பொறியாளர். ஜி. தவமணி பொதுமக்களுக்கு இலவச கண் கண்ணாடி வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கவுன்சிலர் பொறியாளர். ஜி. தவமணி செய்திருந்தார்.

மேலும் திமுக சிறுபான்மை பிரிவு சார்பில் பங்களா தெருவில் நகர்மன்ற கவுன்சிலர் அமலி. ஜேஸ்மின் லூர்து மேரி மற்றும் மாவட்ட திமுக சிறுபான்மை பிரிவு இணை அமைப்பாளர் அமலி. அந்தோணி பிரகாஷ் ஆகியோர் டிசம்பர் 15ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்துள்ளனர். என்பது முகாமில் தெரிவிக்கப்பட்டது. பொதுமக்கள் அதனை பயன்படுத்தி கொள்ள மருத்துவமனை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்தது. குருசாமி நாடார் ஜோதி ராசாத்தி அறக்கட்டளை சார்பில் அனைவருக்கும் இலவச கண் கண்ணாடி வழங்கப்பட்டது.

# தென்காசியில் காவலர் தேர்வு வெற்றியாளர்களுக்கு பாராட்டு விழா



தென்காசி நவ.25:

தென்காசி ஆகாஷ் ப்ரண்ட்ஸ் ஐஏஎஸ் அகாடமி சார்பில் தென்காசியில் தமிழ்நாடு காவலர் தேர்வு 2024 வெற்றியாளர்களுக்கு பாராட்டு விழா சிவா திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தென்காசி ஆகாஷ் அகாடமி மூத்த ஆசிரியர் ஆகாச மூர்த்தி, தென்காசி ஆகாஷ் ப்ரண்ட்ஸ் ஐஏஎஸ் அகாடமி நிர்வாக இயக்குநர் மாரியப்பன், பொதுமேலாளர் செந்தில்குமார், தென்மண்டல பொறுப்பாளர் செல்ல முருகன், தென்கிழக்கு மண்டல பொறுப்பாளர் சிந்து ஆகியோர் தலைமை வகித்து சிறப்புரையாற்றினர்.

செங்கோட்டை காவல் ஆய்வாளர் பாலமுருகன் தென்காசி குற்ற புலனாய்வு பிரிவு ஆய்வாளர் முத்துலட்சுமி குற்றாலம் வனச்சரக அலுவலர் சீதாராமன், தென்காசி மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை உதவி மாவட்ட அலுவலர் சுரேஷ் ஆனந்த், செங்கோட்டை அரசு பொது நூலக நல்நூலகர் இராமசாமி தென்காசி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முருகேஸ்வரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவர்களிடையே சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு காவலர் தேர்வு 2024-ல் வெற்றி பெற்ற தென்காசி ஆகாஷ் ப்ரண்ட்ஸ் ஐஏஎஸ் அகாடமி மாணவர்களை பாராட்டி பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்கள், பெற்றோர்கள், காவலர் தேர்வு வெற்றியாளர்கள், போட்டித் தேர்வு மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தென்காசி ஆகாஷ் ப்ரண்டஸ் ஐஏஎஸ் அகாடமி ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் செய்திருந்தனர்.

# சித்தர் பீடத்தில் மஹாதேவ காலபைரவாஷ்டமி சிறப்பு வழிபாடு



தூத்துக்குடிநவ.25.

ஸ்ரீசித்தர் பீடத்தில் மஹாதேவ கால பைரவாஷ்டமியை முன்னிட்டு வாழ்வில் செல்வம் கொழித்திட வேண்டி ஸ்ரீமஹா காலபைரவருக்கு சிறப்பு மஹா யாக வழிபாடுகள் ஸ்ரீசித்தர் தலைமையில் கோலாகலமாக நடந்தது.

தூத்துக்குடி கோரம்பள்ளம் அய்யனடைப்பு ஸ்ரீசித்தர் நகர் ஸ்ரீசித்தர் பீடத்தில் 11அடி உயரத்தில் ஸ்ரீமஹா பிரத்தியங்கிராதேவி, ஸ்ரீமஹா காலபைரவர் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகின்றனர். ஸ்ரீசித்தர் பீடத்தில் காலபைரவரின் பிறந்த தினமான ''மஹாதேவ காலபைரவாஷ்டமி''யை முன்னிட்டு சிறப்பு மஹா யாக வழிபாடுகள் சுவாமி ''சாக்தஸ்ரீ'' சற்குரு சீனிவாச சித்தர் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது. மஹாதேவ காலபைரவாஷ்டமியை முன்னிட்டு உலகில் அன்பும், அமைதியும் நிலவவேண்டியும், இந்தியாவில் இயற்கை சீற்றங்கள் இல்லாத நிலைவேண்டியும், விவசாயம் உள்ளிட்ட அனைத்து தொழில்களும் சிறந்திடவும், பக்தர்கள் வாழ்வில் செல்வ வளம் பெருகி கொழித்திட வேண்டியும், நோய், நொடிகள், கடன் தொல்லைகள் இல்லாமல் வளமாக நலமாக வாழவேண்டியும் ஸ்ரீமஹா காலபைரவருக்கு மஹா யாக சிறப்பு வழிபாடுகள் காலை முதல் மாலை வெகுசிறப்பாக நடைபெற்றது. மதியம் மஹா கால பைரவருக்கு பால், பன்னீர், தேன், தயிர், சந்தனம், இளநீர் உள்ளிட்ட 64வகையான அபிஷேகமும், தொடர்ந்து, ரோஜா, தாமரை, மல்லிகை, முல்லை என பல வகையான மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, தீபாராதனை நடந்தது. அதனைத்தொடர்ந்து, பக்தர்களுக்கு மஹா அன்னதானம் வழங்கப்பட்டது. மாலையில், காலபைரவர் மஹா யாக வழிபாடுகள் தீபாராதனையுடன் நிறைவடைந்தது. இதில், பக்தர்கள் தங்களது குடும்பத்தினருடன் திரளாக பங்கேற்று வழிபட்டனர். சிறப்பு வழிபாடுகளுக்கான ஏற்பாடுகளை ''சாக்தஸ்ரீ'' சற்குரு சீனிவாச சித்தர் தலைமையில் வழிபாட்டுக்குழுவினர், மகளிர் அணியினர் மற்றும் பக்தர்கள் செய்திருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers 11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தென்காசி மாவட்டத்தில்

# சிற்றாறு வடிநில கோட்டத்திற்கு உட்பட்ட திட்டத்தில் 5 சங்கங்களுக்கான பதவிகளை நிரப்புவதற்கான தேர்தல் நடைபெறுகிறது

## கலெக்டர் ஏ.கே. கமல்கிஷோர் தகவல்

தென்காசி நவ.25 :

தென்காசி மாவட்டத்தில் சிற்றாறு வடிநில கோட்டத்திற்கு உட்பட்ட TNIAMP திட்டத்தில் 18 சங்கங்கள் மற்றும் TN-IAMWARM திட்டத்தில் 5 சங்கங்களுக்கான தலைவர் மற்றும் ஆட்சி மண்டல தொகுதி, உறுப்பினர்களின் பதவிகளை நிரப்புவதற்கான தேர்தல் வேட்புமனுக்களை தொடர்புடைய வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல் கிஷோர், தெரிவித்தார்.

தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மை விதிகள் 2002 விதி(4) மற்றும் 32(3)(ஆ)-இன் கீழ் சிற்றாறு வடிநில கோட்டத்திற்கு உட்பட்ட TNIAMP திட்டத்தில் 18 சங்கங்கள் மற்றும் TN-IAMWARM திட்டத்தில் 5 சங்கங்களுக்கான தலைவர் மற்றும் ஆட்சி மண்டல தொகுதி, உறுப்பினர்களின் பதவிகளை நிரப்புவதற்கான தேர்தல் அட்டவணை தென்காசி மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிவிக்கை நீர்வளத்துறை பிரிவு அலுவலகங்கள், கிராமநிருவாக அலுவலகங்களில் மற்றும் ஊராட்சி அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. அதன்படி வேட்புமனுக்களை (27.11.2024) மற்றும் (28.11.2024) ஆகிய இரண்டு நாட்களில் தொடர்புடைய வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம், வேட்பு மனுக்களை 28.11.2024 மாலை 4 மணிக்குள் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்யலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.

# கீழப்புலியூரில் தென்காசி எம்.பி.க்கு வரவேற்பு



தென்காசி,நவ.25-

தென்காசி நகரம் கீழப்புலியூரில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க வருகை தந்த தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் MP அவர்களையும் தென்காசி நகர கழக செயலாளர்நகர் மன்றத்தலைவர்சாதிர் அவர்களையும் மற்றும் கழகநிர்வாகிகளயும் 22வட்டகழகத்தில் 22-வது வட்டக் கழக செயலாளரும் மாவட்டபொறியாளர்அணி தலைவருமானகீழப்புலியூர் தங்கபாண்டியன் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் வட்டக் கழக நிர்வாகிகள் வேம்பு சோமசுந்தரம் பீர்முகம்மது அருணாசலம் முருகானந்தம் நகர இளைஞரணி இசக்கி துரை முரளி ,மாணவர் அணி ராஜன் முத்துசாமி முப்புடாதி பழனிஆசாரி மிலிட்டரி முருகன் சிதம்பரம் பரமசிவன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சுடலைமுத்து நம்பியார் கிருஷ்ணன் மற்றும் BLA2பொறுப்பாளர்கள் கூட்டணிகட்சி நிர்வாகிகள்மற்றும் கழக நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் பொதுமக்களும் கலந்து கொண்டனர்

# மகாராஷ்டிரா மாநிலத்தில் பாஜக கூட்டணி வெற்றி: தென்காசி பாஜக சார்பில் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



தென்காசி நவ.25-

தென்காசி மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் மாவட்டத் தலைவர் ராஜேஷ் ராஜா தலைமையில்

மகாராஷ்டிரா மாநிலத்தில் பாரதிய ஜனதா கட்சி கூட்டணி வெற்றி பெற்றதை தென்காசி காசி விஸ்வநாதர் கோவில் முன்பு பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் பெருங்கோட்ட அமைப்பு பொதுச்செயலாளர் கிருஷ்ணன், மாவட்ட பொதுச் செயலாளர் பாலகுருநாதன், மாவட்டத் துணைத் தலைவர் முத்துக்குமார், தென்காசி நகர தலைவர் மந்திரமூர்த்தி, மாவட்ட ஊடகப் பிரிவுதலைவர் செந்தூர்பாண்டியன், உள்ளாட்சி மேம்பாட்டு பிரிவு மாவட்ட தலைவர் கருப்பசாமி, நகர பொதுச் செயலாளர் யோக சேகர், நகர துணைத் தலைவர்கள் நாராயணன், மாரியப்பன், நகரச் செயலாளர் விஸ்வநாதன், நகர் மன்ற உறுப்பினர்கள், லட்சுமண பெருமாள், சங்கரசுப்பிரமணியன், உள்ளாட்சி மேம்பாட்டுப்பிரிவு மாவட்ட செயலாளர் ராஜ்குமார், மாவட்ட இளைஞரணி துணைத் தலைவர் விவேக் குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# பாண்டவர்மங்கலத்தில் பொது மருத்துவ முகாம்



கோவில்பட்டி நவ 25

தூத்துக்குடி மாவட்ட இந்திய அரசு நேரு யுவகேந்திரா இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு துறை அமைச்சகம் மற்றும் கஸ்தூரிபாய் காந்திஜி மகளிர் மன்றம் ஏஜி சபை பாண்டவர்மங்கலம் இணைந்து நடத்திய மருத்துவ முகாமில் காது, மூக்கு, தொண்டை, சம்பந்தமான பொது மருத்துவம் பாண்டவர்மங்கலம் ஏஜி சபையில் வைத்து நடந்தது. சிறப்பு மருத்துவ முகாமிற்கு மருத்துவர்கள் ராகவன், வினோதா, மாலா, ஸ்டெல்லா, ஆகியோர் மருத்துவ பரிசோதனை செய்தனர்.

நிகழ்ச்சியில் ஏஜி சபை போதகர் பேதமாணிக்கம் தலைமை வகித்தார். கஸ்தூரிபாய் காந்திஜி மகளிர் மன்ற தலைவி கனகம்மாள், நேரு யுவகேந்திரா தேசிய இளைஞர் தொண்டர் பிரியங்கா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மன்ற ஆலோசகர் விஜயன் அனைவரையும் வரவேற்றார். தேசிய இளையோர் தொண்டர் தனலட்சுமி நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மகளிர் மன்ற உறுப்பினர்கள் சீதாலட்சுமி, கனகம்மாள், மகேஸ்வரி, எப்சியா, பிரியங்கா, மாலதி, மாலா, ஸ்டெல்லா வேதமாணிக்கம், டேனியல், ஏசாத்துரை, தனலட்சுமி, ஆகியோர் சிறப்பாக செய்தனர். முகாமில் ஏராளமானோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# வயநாடு தொகுதி வெற்றி: சங்கரன்கோவிலில் காங்கிரஸ் கட்சியினர் கொண்டாட்டம்



**சங்கரன்கோவில், நவ.25-**

முதல் முறையாக தேர்தலில் போட்டியிட்டு வயநாடு தொகுதியில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தியின் வெற்றியை சங்கரன்கோவிலில் காங்கிரஸ் கட்சியினர் வெடி வெடித்தும் இனிப்பு வழங்கியும் கொண்டாடினர். சங்கரன்கோவில் பழைய பேருந்து நிலையம் முன்பு நடைபெற்ற நிகழ்விற்கு ராகுல் காந்தி அறக்கட்டளை தென்காசி மாவட்ட தலைவர் குருசாமி ஜோதிடர் தலைமை வைத்தார். நகர காங்கிரஸ் கமிட்டி நிர்வாகி மனோகரன் வைத்தியர் முன்னிலை வகித்தார். தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது இந்த நிகழ்வில் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் மனோகரன், ராகுல் காந்தி அறக்கட்டளை மகளிர் அணி மாவட்ட தலைவி புஷ்பவல்லி, காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் தொகுதி தலைவர் தங்கராஜ், முன்னாள் கவுன்சிலர் அழகைகண்ணன், சங்கரன்கோவில் ஒன்றிய வட்டார தலைவர் அய்யாதுரை, குருவிகுளம் தெற்கு வட்டார குழு சுந்தர்ராஜ், மேலநீலிதநல்லூர் வட்டார தலைவர் செந்தூர் பாண்டியன், அந்தோணி, வேல்முருகன், மரிய பாக்கியலட்சுமி, சக்தி, முப்புடாதி ராஜாமணி, சித்திரக்கண்ணு, சிவாஜி பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருநெல்வேலி சரக காவல்துறை துணைத் தலைவர் மூர்த்தி தென்காசி மாவட்ட காவல் அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார். பின்பு மாவட்ட காவல் அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார். இதை தொடர்ந்து மாவட்டத்தில் இந்த மாதம் சிறப்பாக பணிபுரிந்த காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு நற்சான்றிதழை வழங்கி ஊக்குவித்தார். இந்நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீனிவாசன் உடனிருந்தார்.

# கடை வாடகைக்கு 18 சதவீதம் வரி செலுத்த வேண்டும் என்ற நடைமுறையை ரத்து செய்ய வேண்டும்

## சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கம் கோரிக்கை



தென்காசி நவ.25:

தென்காசிமாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்க தலைவர் அன்பழகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மத்திய அரசு அறிவிப்பின்படி ஜிஎஸ்டி வரி விதிப்பினை அமல்படுத்திய பின் இன்று வரை பல்வேறு குழப்பங்களையும், சிரமங்களையும் தொழில்துறையினர் சந்தித்து வருகின்றனர். ஜிஎஸ்டி வருவாயை சம அளவில் பிரித்துக் கொள்வதில் மட்டுமே மத்திய மாநில அரசுகள் முனைப்பு காட்டுகின்றன. நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக வரி செலுத்துகின்ற வணிகர்கள் மற்றும் தொழில் முனைவர்கள் சிரமங்களையும் குறைகளையும் அறிந்து நிவர்த்திப்படுத்துவதில்லை.

இந்நிலையில் வாடகை செலுத்தி கடை நடத்துவோர் கடை வாடகைக்கு மாதந்தோறும் அளிக்கும் தொகைக்கு 18% ஜிஎஸ்டி வரியையும் சேர்த்து செலுத்த வேண்டும் என்ற புதிய நடைமுறை இம்மாதத்தில் அமலுக்கு வந்துள்ளது. இதனால் தொழில் முனைவோர்கள் பாதிக்கப்படுவார் . ஏனெனில் குறுந்தொழில்கள் செய்யும் வணிகர்கள் மட்டுமே வாடகை கடைகளில் தங்களுடைய தொழிலை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இன்றைக்கு சிறு வியபாரிகள் பிளாட்பாரம் மற்றும் தள்ளு வண்டிகளில் ஆங்காங்கே கடை நடத்துகின்ற நிலையில் கடை வாடகை கொடுத்து பொருட்களுக்கு வரி செலுத்தி நடத்துகின்றவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் அவர்களுக்கு இந்த வரிச் சுமை மிகவும் பாதிக்கும்.

ஏற்கனவே கட்டிட உரிமையாளர்களுக்கும் தொழில் நடத்துகின்ற தொழில் முனைவோர்களுக்கும் குத்தகை மற்றும் வாடகை வசூலிப்பதில் பல்வேறு பிரச்சனைகள் இருக்கின்ற இந்த காலகட்டத்தில் பதிவுபெற்ற தொழில் முனைவோர்கள் பதிவு பெறாத கடை உரிமையாளர்களிடம் ரிவர்ஸ் சார்ஜ் மெக்கானிசம் முறையில் 18 சதவீத ஜிஎஸ்டி வரியை சேர்த்து செலுத்த வேண்டும் என்ற புதிய அறிவிப்பு கட்டிட உரிமையாளர்களுக்கும் கடை நடத்துகின்ற தொழில் முனைவோர்களுக்கும் இடையே பிரச்சனைகளை அதிகரிக்கத்தான் செய்யும்.

இதனால் மாத வாடகை செலுத்தும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஏற்கனவே பல தரப்பட்ட வரிகள் செலுத்தி வருகின்ற நிலையில் இந்த வரி விதிப்பினால் வாடகை சுமையோடு பல்வேறு அத்தியவாசிய பொருட்களின் விலைவாசிகள் உயரும் நிலை ஏற்படும் அதனால் பொதுமக்களும் சிரமத்திற்கு உள்ளாவார்கள். ஏற்கனவே கொள்முதல் மற்றும் விற்பனை செய்யும் பொருள்களுக்கான வரி விதிப்பினால் தங்களுடைய பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை மேலும் சிரமத்திற்கு ஆளாகாமல் மத்திய அரசு இந்த அறிவிப்பை ரத்து செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் தமிழக அரசும் மத்திய அரசுக்கு போதிய அழுத்தம் தர வேண்டும் என்று தென்காசி மாவட்ட குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கம் சார்பாக அதன் தலைவர் அன்பழகன் தெரிவித்துள்ளார்.

# நீலகிரியில் விளையும் மலை காய்கறிகளுக்கு அதிக விலை கிடைப்பதால் அறுவடையில் தீவிரம் காட்டி வரும் விவசாயிகள்

**ஊட்டி, நவ.25-**

நீலகிரி மாவட்டத்தில் 1,33,000 ஏக்கர் பரப்பளவில் தேயிலை, 17,000 ஏக்கர் காபி, 2,400 ஏக்கர் பரப்பளவில் மிளகு, 2,000 ஏக்கரில் ஏலக்காய், 17,000 ஏக்கர் பரப்பளவில் மலை காய்கறிகள் விவசாயம் செய்யப்பட்டு வருகின்றன. தேயிலைக்கு நிரந்தர விலை இல்லாததால், கடந்த சில ஆண்டுகளாக கொடிமலர் மற்றும் மலை காய்கறிகள் சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதன்படி ஊட்டி, குன்னூர், கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் பீட்ரூட், கேரட், உருளைக்கிழங்கு முட்டைகோஸ் உள்ளிட்ட மழை காய்கறிகள் மற்றும் வெள்ளைப்பூண்டு சாகுபடியில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

குறிப்பாக முத்தொரை பாலாடா, கப்பதொரை, கல்லக்கொரை ஆடா, நஞ்சநாடு, பைகமந்து, ஏக்குணி, ஆடா சோலை, பிங்கர்போஸ்ட், கடநாடு, கவரட்டி என நூற்றுக்கணக்கான கிராம பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மலை காய்கறிகள் பயிரிடப்பட்டு வருகிறது. இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:-

நீலகிரியில் கேரட், உருளைக்கிழங்கு, பீட்ரூட், முட்டைகோஸ் உள்ளிட்ட காய்கறிகள் மற்றும் மலைப்பூண்டுக்கு இந்த ஆண்டு தொடர்ச்சியாக விலை அதிகமாக இருந்ததால் நல்ல லாபம் கிடைத்தது. பூண்டு ரூ.500-யை தாண்டி கடந்த 6 மாதமாக விற்கப்பட்டது. தற்போது சற்று விலை குறைந்து கிலோ ரூ.350 வரை செல்கிறது. முன்னதாக ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் பெய்த தொடர் மழையாலும் வெளிமாநில காய்கறிகள் வருகையாலும் கடந்த ஒரு மாத காலமாக மலை காய்கறிகள் கொஞ்சம் விலை குறைந்தது. இந்த நிலையில் கடந்த ஒரு வார காலமாக பீட்ரூட், கேரட், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலை மீண்டும் அதிகரித்து மேட்டுப்பாளையம் மண்டிகளில் கிலோ ரூ. 60 முதல் 70 ரூபாய் வரை அதிகரித்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் கேரட், பீட்ரூட், உருளைக்கிழங்கு உள்ளிட்ட மலை காய்கறிகளை அறுவடை செய்யும் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைத்து வருகிறது. இதனிடையே தொடர் மழையால் மலை காய்கறிகள் சேதம் அடைந்து சந்தைக்கு வரத்தும் குறைந்து உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

